Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 308

புதன்கிழமை
01 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

புதன்பொய்கை

## மண்ணெண்ணெய் விலை குறைப்பு!

கொழும்பு, ஒக். 1
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்

15




பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

## பல்கலைக்கழக ஆசிரியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக ஆசிரியர்களால் நேற்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

15

செம்மணியில் மூன்றாம்கட்ட அகழ்வு

# பட்ஜெட்டின் நகர்வு தொடர்பில் நீதிமன்றில் இன்று விசாரணை!

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 1
அரியாலை - செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளன. மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜெட் நகர்வு தொடர்பில் இன்று ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

15



மட்டுவில்

## பொருளாதார மத்திய நிலையம் நேற்று மீளவும் ஆரம்பித்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்ப்பாணம் மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம், நேற்று மீளவும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் யாழ். மாவட்டச் செயலகம் என்பன

15

புதைகுழிக்கு நீதிகோரி

## செம்மணியில் இன்று கவனவீர்ப்புப் போர்!

யாழ்ப்பாணம், ஒக். 1
தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், செம்மணிப்புதைகுழிகளுக்கும் நீதிகோரி செம்மணி வளைவில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட

15

## அளவுக்கு அதிக கடன்சுமையால் வன்னியில் பெண்கள் உயிர்மாய்ப்பு!

அமைச்சர் சந்திரசேகர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 1
கடன்தொல்லை காரணமாக, வன்னியில் பெண்கள் தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பது அதிகரித்துள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண பெண்களுக்கான

15

## சிறுமி மீது வன்புணர்வு; குற்றவாளிக்குக் கடூழியம்

கிளிநொச்சி, ஒக். 1
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 2015ஆம் ஆண்டு 14 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றவாளிக்கு நீதிமன்றம் 10 ஆண்டுகால

15

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்

## இன்றுமுதல் தினமும் சத்திர சிகிச்சைகள்!



யாழ்ப்பாணம், ஒக். 1
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சத்திரசிகிச்சைக் கூடம் இன்று புதன்கிழமை முதல் மீண்டும் தினமும் இயங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மருத்துவ

15

### முச்சந்தி முரளி

'அதுசரி, உந்த ஆஸ்பத்திரியை வைச்சு அரசியல் செய்தவர் இப்ப அந்தப் பக்கம் எட்டியாவது பார்த்தவரோ?'

## குருதியில் கிருமித்தொற்று குடும்பப்பெண் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஒக். 1
முல்லைத்தீவு - வற்றாப்பளைப் பகுதியைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர், குருதியில் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

15

உயர்தரப் பெறுபேறில்

## மாவட்டத்தில் முதலிடம்பெற்ற மாணவன் சிறுநீரக சத்திரசிகிச்சையில் உயிரிழப்பு!



முல்லைத்தீவு, ஒக். 1
அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில், தொழிநுட்பத் துறையில் மாவட்டமட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன், சிறுநீரக மாற்றுச் சிகிச்சை வெற்றியளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

15

## கிளிநொச்சியில் பெருமளவு குண்டுகள்

விரிவு
பக்கம்:- 03

வண்ணார்பண்ணை

## வேங்கடேச வரதராஜருக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம், ஒக். 1
வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த் திருவிழா இன்று

15

## இலங்கையின் நிதி நிலை முற்றாகச் சீரடையவில்லை

நாணய நிதியம் அறிக்கை

கொழும்பு, ஒக். 1
இலங்கையின் நிதி நிலைமை முற்றாகச் சீரடையவில்லை. எனினும், நிதிச் சந்தையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை இலங்கை மீட்டெடுத்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4210
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 33 34 46 68
விசேட எழுத்து I

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1277
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 12 42 55 60

**NLB ஜய**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0236
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 0 2 3 0

**மெகா பவர்**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2316
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 18 23 40 62

**மஹஜன சம்பத**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5968
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 1 4 4 9 3 4

**தன நிதானய**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1998
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 13 33 42 61
விசேட எழுத்து J

**அத சம்பத**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0543
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 4 9 3 4

**சுப தவசக்**
திகதி 30.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0084
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 21 29 41 49

**சுபிரி தன சம்பத**
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0676
DLB ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 2 9 5 4 8 0

**Super Ball** DLB
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2942
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 08 13 34 55

**சனிதா** DLB
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 04 12 37 58
வெற்றி வாரம் 5003

**SASIRI** DLB
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0781
வெற்றி இலக்கம் 02 18 25

**லக்ன ராசி** DLB
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம் 05 19 48 58
சீட்டிழுப்பு வாரம் 4654

**KAPRUKA** DLB
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கம் 01 34 47 48
வெற்றி வாரம் 2118

**அத கோடிபதி** DLB
திகதி 30.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 03 30 40 68
வெற்றி வாரம் 2768

# வடக்குக் கல்விப்புலத்தில் அரசியல் தலையீடு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்,ஒக்.1

**வடக்கு மாகாணக் கல்விப்புலத்தில் என்றுமில்லாதவாறு தேவையற்ற அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களுக்கே நன்மைகள் கிடைக்கின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இதுதொடர்பில்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த காலங்களில் ஆசிரியர்களின் உரிமை பற்றிப் பேசியிருந்த ஜே.வி.பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கம், இன்று அரசாங்க அமைச்சர்களாலும், பிரதி அமைச்சர்களாலும் ஆட்கொள்ளப்பட்டு, ஏனைய தொழிற்சங்கங்களை நசுக்கும் செயற்பாட்டிலும், கல்விப்புலத்தை அச்சுறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது. இடமாற்றச் சபைகளின் தீர்மானங்களையே ஒருதலைப்பட்சமாக மாற்றியமைக்கும் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

இதுபோன்ற அரசியல் தலையீடுகள் முன்பிருந்த எந்த ஆட்சியிலும் நடைபெற்றதில்லை. வடமாகாணத்தில் நடைபெறும் இடமாற்றங்களில் அதிகாரிகளை அச்சுறுத்தி ஒருதலைப்பட்சமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

தமது ஆதரவாளர்களுக்கு இடமாற்ற மேன்முறையீட்டுசபையின் அங்கீகாரமின்றி, வடமாகாண ஆளுநரால் இடமாற்றங்களை நிறுத்தும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

சில முறைகேடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. இதுபோன்ற செயற்பாடுகள் தொடருமாயின், இலங்கை ஆசிரியர் சங்கம் பரந்துபட்ட தொழிற்சங்கச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும்- என்றுள்ளது. (க-27,66)

## மாணவர்களுக்கு டிஜிற்றல் வளங்கள்

கொழும்பு, ஒக்.1

இலங்கை மாணவர்கள் விரைவில் கூகிள் நிறுவனத்தின் ஜெமினி மேம்பட்ட தேடுபொறி கருவிகள் மற்றும் பிற டிஜிற்றல் வளங்களை இலவசமாகப் பெறுவார்கள் என டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில்நடைபெற்ற2025க்கான தேசிய ஏஐ (AI) எக்ஸ்போக் கண்காட்சியில் டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன இந்தத் திட்டத்தை அறிவித்தார்.

இது நாட்டின் கல்வித்துறைக்கு "பெரிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும்" எனச் சுட்டிக்காட்டினார்.

"நமது நாட்டின் ஏஐ திறனை வளர்ப்பதில் இது மகத்தான ஒரு மைல் கல்லாகும். இது உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்குபவர்களுடன் போட்டியிட எங்கள் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## அரசின் போலிச்சாயம் மன்னாரில் வெளுத்தது

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.1

மன்னார் காற்றாலைத்திட்டம் தொடர்பில் பொதுமக்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மதகுருமார்களுடன் கலந்துரையாடுவது அவசியம். மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கான ஜனாதிபதியின் உத்தரவு மக்களின் விருப்பங்களை நேரடியாக பாதிக்கின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை முன்னெடுக்க கூடாது.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு எதிராக பொலிஸார் கடுமையாக நடந்துகொண்டமை கண்டிக்கத்தக்கது. எதிர்க்கட்சியில் இருந்தபோது, வெளிநாட்டு முதலீடுகளை எதிர்த்துக் குரல் கொடுத்த தேசிய மக்கள் சக்தி, தற்போது ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இத்தகைய திட்டங்களை முன்னெடுப்பது அநாகரிகம் - என்றார். (ச-இ)

# குழந்தை வன்முறைத் தடுப்புச் சட்டம் மாணவர்களின் தீயவழிக்கு வித்திடும்

## அதிபர்கள் தர ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.1

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட குழந்தைகள்மீதான வன்முறையைத் தடுப்பதற்கான தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டவரைவு திருத்தங்கள் இன்றி நிறைவேற்றப்பட்டால், பாடசாலைகளில் மாணவர்களின் முறைகேடான நடத்தைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, கல்வி அமைச்சின் செயலாளர் அதிபர்களுக்கு உடனடியாக ஒரு சுற்றறிக்கையை வெளியிடவேண்டும் என்று அதிபர்கள் தர அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

இந்தச்சட்டவரைவுநிறைவேற்றப்பட்டால், மாணவர்கள் மூலமாக ஆசிரியர்களும் அதிபர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் சூழல் உருவாகும். வெவ்வேறு நிறங்களில் தலைமுடிக்குச் சாயம் பூசி வரும் மாணவர்கள், காதணிகள் அணிந்துவரும் மாணவர்கள், மூக்குத்தி அணிந்துவரும் மாணவிகள் போன்றோரைச் சமாளிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு ஒரு சுற்றறிக்கை மூலம் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

பாடசாலையின் நிலையான ஒழுங்குவிதிகள் என்பது பாடசாலையின் ஓர் உள் கலாசாரம் . இந்தச் சட்டத்தால் அந்த அனைத்துத் தரநிலைகளும் உடைந்து, பள்ளி மாணவர்களுக்கு வரம்பற்ற சுதந்திரம் கிடைக்கும் ஒரு நிலைமை உருவாகும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

# சதீஷ் கமகேவுக்குப் பிணை

கொழும்பு,ஒக்.1

பொலிஸ் திணைக்களத்தின் கலாசாரப் பிரிவின், பதில் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகே பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் வெளிநாடு செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்கள் மீதான வன்முறைகளை மூடிமறைப்பதால் சிறுவர்கள் பாதிப்பு

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,ஒக்.1**
**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெண்களுக்கெதிராக நடக்கும் அநீதிகள் அதிகம். ஆனால் அவற்றைத் துணிந்து வெளியில் கூறுவதற்குப் பலரும் தயங்குகின்றனர். இதனால் அவர்களது பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பெண்கள் தங்களுக்கு நடக்கும் வன்முறைகளைத் துணிந்து வெளிப்படுத்தவேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண மகளிருக்கான வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் 3 ஆயிரத்து 600 க்கும் மேற்பட்ட 10 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் இலங்கையில் பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று சிறுவர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. ஆனால் இவற்றைவிடக் கூடுதலான சம்பவங்கள் இடம் பெற்றிருக்கலாம். பெண்கள் மீதான வன்முறைகளை அவர்களே மறைப்பதனால் பல சம்பவங்கள் தெரியாமலேயே போய்விடுகின்றன. பெண்கள் குடும்பத்தில், அலுவலகத்தில், சமூகத்தில் எனப் பல இடங்களிலும், பலவழிகளில் வன்முறையை எதிர்கொள்கின்றனர். போதைக்கு அடிமையானவர்களாலும், பெண்களே பாதிக்கப்படுகின்றனர். எனவே வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்கள் அவற்றை வெளிப்படுத்த வேண்டும். தமது குழந்தைகளுக்கு பாதுகாப்பானதொரு சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்- என்றார்.(க-66)



## சஷீந்திரவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக்.1
முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவை எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் ஊழல் சந்தேகத்தின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

## படையினரால் முறக்கட்டான்சேனை பாடசாலை மீளளிப்பு

மட்டக்களப்பு,ஒக்.1
மட்டக்களப்பு முறக்கட்டான்சேனை இராணுவமுகாம் அமைந்திருந்த பாடசாலை வளாகம் முழுமையாக விடுவிக்கப்பட்டு முறக்கட்டான்சேனை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதியை மீளளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இராணுவமுகாம் வளாகத்தில் இடம்பெற்றது.
1989ஆம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையினர் அங்கு முகாமிட்டதன்பின்னர் இலங்கை இராணுவம் குறித்த பகுதியைக் கையகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வடிகான்கள் தூர்வாரல்

யாழ்ப்பாணம்,ஒக்.1
யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் வடிகான்கள் மற்றும் வெள்ளவாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படுகின்றன.
எதிர்வரும் மழைக்காலத்தை எதிர்கொள்ளக்கூடிய வகையில் வெள்ளவாய்க்கால்களில் உள்ள கழிவுகள் அகற்றப்படுவதுடன், வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் துப்புரவுப் பணியாளர்கள் வாய்க்கால்களைச் சீரமைத்து வருகின்றனர். சில இடங்களில் கழிவுநீர் செல்லும் வடிகான்களும் துப்புரவுசெய்யப்படுகின்றன. (க-17)

## வெடிக்காத குண்டுகள் கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, ஒக்.1
கிளிநொச்சி தட்டுவன்கொட்டிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஒரு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்று இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் நிலையில் தட்டுவன் கொட்டிப் பகுதி முழுவதும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
இதன்போதே வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் அவதானிக்கப்பட்டன.
அதனை மீட்பதற்கு நீதிமன்றத்தின் உத்தரவு பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச-27.113)



## பச்சோந்தியளுக்கு குறைவில்லை

பச்சோந்தி மாதிரி கட்சி மாறாதை எண்டு பழைய ஆக்கள் சொல்லுறதைக் கேட்டிருப்பியள். பச்சோந்தி எண்டுறது ஓணான்தான். உந்த ஓணான் என்ன செய்யுமெண்டால், எந்த இடத்தில இருக்குதோ அந்தச் சூழலுக்குள்ள தன்னைத் தெரியாதபடி உடம்பின்ர கலரை மாத்திப்போடும். காட்டுக்குள்ள இருந்தாப் பச்சையாவும், மணலுக்க இருந்தா மஞ்சளாவும் தன்ர கலரை மாத்துறதாலதான் அது மற்ற விலங்குகளின்ர கண்ணில மண்ணைத்தூவி, தன்ர உயிரைக் காப்பாத்திக்கொள்ளுது. ஆனால் பச்சோந்தியை விடவும் டக்கெண்டு கலர்மாறக்கூடிய சக்தி இருக்கிற இன்னொரு உயிரினம் மனிசன்தான். அதிலையும் தமிழாக்கள் கட்சி மாறுறதில கடும் விண்ணர்.

இப்ப மன்னாரில உந்தக் காற்றாலைப் பிரச்சினை பெரிசாப் பத்தியெரியுதெல்லோ. அந்தப் போராட்டத்தில முன்னுக்கு நிண்டு சனத்தைப் போராட வைக்கிற ஒருத்தரைப் பற்றி பேஸ்புக்கில ஒரு விசயம் ஓடிக்கொண்டிருக்குது. அவர் முந்தி வவுனியாவில வீணைக்கட்சி எம்.பி.க்கு வாலா இருந்தவர். அப்பவும் மன்னாரில காற்றாலைப் பிரச்சினை இருந்தது. அந்தநேரம் வீணைக்கட்சி அரசாங்கத்துக்கு முட்டுக் குடுத்துக்கொண்டிருந்ததால, இந்தத் திடீர் சமூகப் போராளியும் "உதெல்லாம் விசர்வேலை, எங்கட சனத்துக்கு அபிவிருத்தியைப் பற்றித் தெரியாது. எல்லாத்தையும் எதிர்க்கிறதுதான் வேலை" எண்டு சொல்லி ஒரு வீடியோ போட்டிருக்கிறார். அதில காற்றாலையால என்னென்ன நன்மை எண்டும், உந்தத் திட்டத்தால ஒரு பாதிப்பும் இல்லையெண்டும், சனங்களைச் சிலர் தங்கட லாபத்துக்காகத் தூண்டிவிடுகினம் எண்டும் அவர் விளாசி இருந்தவர்.

ஆனால் , அந்தவீடியோ விட்ட ரண்டு மூண்டு வருசத்திலேயே ஆட்சிமாற்றம் வந்திட்டு. இப்ப திசைகாட்டிக் காலம். அதோட வீணைக்கட்சிக்கும் மார்க்கெட் இல்லாமல் போட்டுது. இனியும் வீணையில் நாதம் வாசிச்சுக்கொண்டிருந்தால் கந்தறுந்து போடுமெண்டு உந்தத் திடீர்ச் சமூகப் போராளிக்கு விளங்கிட்டுது. சடாரெண்டு ஆள் கலர் மாறி, கட்சி மாறி இப்ப எந்தக் காற்றாலைத்திட்டம் நல்லதெண்டு வக்காலத்து வாங்கினாரோ அதுக்கு எதிராக கடுமையாக் கம்பு சுத்திக்கொண்டிருக்கிறார். கட்சி மாறுறது ஒண்டும் இலங்கையில புது விசயம் இல்லை. ஆனால், கட்சி மாறினாலும் எப்பிடித்தான் முந்திச் சொன்ன விசயத்துக்கு நேரெதிரா அவரால நடக்க முடியுது எண்டதுதான் சனத்தின்ர கேள்வி. அதோட இப்பிடி முந்திக் காற்றாலையை ஆதரிச்சவர், இப்ப அதை எதிர்க்கிற ஆக்களில முன்னுக்கு நிக்கிறார் எண்டால் அந்தப் போராட்டத்தில நிக்கிற எல்லாரும் இவரை மாதிரிப் பச்சோந்தியளோ? எண்டும் சனத்துக்கு டவுட் வருமெல்லோ. ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விசம். இப்பிடி நேரத்துகொரு கொள்கையும், பேச்சுமா இருக்கிறவையை வைச்சுப் போராடினால் கடைசியா அந்தப் போராட்டமும் பச்சோந்தித்தனமாத்தான் பார்படும். எதுக்கும் உந்தப் போராட்டங்களைச் செய்யிறவை இப்பிடியான பச்சோந்தியளைத் தள்ளிவைக்கிறதுதான் போராட்டத்துக்குச் செய்யிற உதவியா இருக்கும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்குத் திடீர் பணவரவு மகிழ்ச்சிதரும். சகோதரர்கள்வகையில் சுபச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலருக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களின்மூலம் முக்கியமான பிரச்சினை ஒன்று நல்லபடி முடிவுக்குவரும். சகோதரர்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார்

**மகரம்:** உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை முழு ஒத்துழைப்புத் தருவார். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் சற்றுக்கவனம் தேவைப்படும். சிலருக்கு அதிகரிக்கும் செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும்வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.



## ஆவணப்படத் திரையிடலும் புத்தக அறிமுக விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.1

'எழுநா'வின் தயாரிப்பில் 'நீதிக்காக நீண்ட காத்திருப்பு' எனும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணப்படம் திரையிடலும், செம்மணி தொடர்பான கவிதைகள் அடங்கிய 'வாசலிலே கிருஷாந்தி" எனும் நூலின் அறிமுகவிழாவும் அச்சுவேலி தெற்கு, கலாநிதி சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

வலி.கிழக்குப் பிரதேசசபை உறுப்பினரும் கலாநிதி சனசமூக நிலையத் தலைவருமான பி.நேருஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நிலையத்தின் செயலாளர் தர்ஷன் நூல் பற்றிய மதிப்பீட்டுரையை ஆற்றினார். (ச-25)

## குழுக்கூட்டம் திகதி மாற்றம்

கரவெட்டி மத்தியஸ்தசபை கூட்டத்தின் திகதி மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா காரணமாக எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த இந்தக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் எனத் தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ச-25)






## சிங்களக் கற்கைநெறி பூர்த்தி சான்றிதழ்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

ஹெல்தி லங்கா நிறுவனம் மற்றும் சூரிய நிறுவகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி சிங்களக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுதுமலை குபேரமஹால் மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சூரிய நிறுவகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், வீ.ஆனந்தசங்கரி, யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், சுவிற்சர்லாந்து தூதரக அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஏ-41-669)

## மரண அறிவித்தல்



### துரைராஜசிங்கம் சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜசிங்கம் சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த (29.09.2025) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுகந்தினி (சுவிஸ்), பிறேமினி (யாழ் வலய ஆசிரியஆலோசகர்), சுயேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராகுலன், திருக்குமார், சிவதர், மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகேஸ்வரி, யோகலிங்கம் (அமரர்), நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், தங்கராசு, கருணானந்தசிவம், வசந்தகுமாரி, ஆகியோரின் மைத்துனரும், றகீபன், றஜீபன், கஜானா, ராகுல்ராம், கோகுல்ராம், அமல்ராம், நிதிக்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 12.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
077 656 9604

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் - வண்ணையம்பதி

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்

## தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 01.10.2025

- வசந்த மண்டப பூசை காலை 7.00 மணி
- இரதோற்சவம் காலை 09.30 மணி

### நாளை நமக்கொரு தீர்வுதர ஈழத்து திருப்பதியில் தேரேறி வருகிறான்



செந்தமிழும் சைவநெறியும் சால்புற தழைத்தோங்கும் ஈழவள நாட்டின் கண் வைஷ்ணவத் தலங்கள் பலவுள்ளன. இவற்றில் "ஈழத்து திருப்பதி" என அழைக்கப்படும் ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் யாழ்ப்பாணத் திருநகரிலே வண்ணையெம்பதியிலே அமைந்துள்ளது. இத்தலம் பண்டுதொட்டு நவக்கிரக வழிபாட்டுக்கு பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

பிரதான வாயிலிலே ஏழு மாடங்களைக் கொண்ட நீணடுயர்ந்த இராஜகோபுரமும் இதன் இரு புறத்தேயும் மணிக்கோபுரங்களும் அமைந்து காணப்படுகின்றன. இராஜ கோபுரத்தில் இடம்பெறும் கதைவிக்கிரகங்கள் திருமாவின்தச அவதாரத்தையும் ஸ்ரீ இராமயண ஸ்ரீமர் பாகவத புராணங்களில் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றன்

கர்ப்பக கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி எழுந்தருளியுள்ளார். வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தருகின்ற நாராயண பெருமான் வீற்றிருக்கின்றான்.

**"நாராயணன்"**

நாராயணன் என்ற பெயர் எவ்வாறு உதித்தது என்று சிந்திக்கின்ற பொழுது "நரா" என்றால் புருசனிடத்திலிருந்து தோன்றி பூதங்கள் முதலிய பிரபஞ்சப்பொருட்கள் "அயனன்" என்றால் அமர்ந்திருப்பான் எனப் பொருள்படும். நாரா + அயனன் நாராயணன் என்றானது.

**"சங்கை ஏந்தியிருக்கும் தத்துவம்"**

பெருமான் ஒரு கையில் சங்கை ஏந்தியிருக்கின்றார். அச் சங்கானது ஊதுமிடத்து உண்டாகும் ஒலி ஓங்காரம். ஓம் என்னும் ஓசைக்கு நாதப்பிரம்மம் என்று பெயர். இது ஒரு மொழியிலும் ஒரு சமயத்திலும் கட்டுப்படாதது. இயற்கை முழுவதும் இயங்குவதால் உண்டாகும் சப்தமே ஓங்காரம். அது பிரணவம் என்று பகரப்படும். தன் கையில் சங்கை வைத்திருப்பவன் மூலம் தான் பிரணவப் பொருள் என்பதை அரங்கநாதன் அறிவுறுத்துகின்றான்.

அரங்கநாதன் அரங்கத்தில் சயனத்திருக்கின்றான். என்றாலும் அவன் ஒரு நாளும் அரங்கத்தைச் சார்ந்திருப்பவனல்ல. அரங்கம் அவனைச் சார்ந்திருக்கின்றது. பார்வைக்கு கண் வளர்ப்பவன் போன்று காணப்படுகின்றான்.

இத்தகு பேரருட் திறனையுடைய வேங்கடவன் இன்று (01.10.2025) புதன்கிழமை திருத்தேரில் ஆரோகணித்து வலம் வந்து காவல் செய்யும் திருக்காட்சி அற்புதமாக அமைகின்றது.

**"கோவிந்த நாமசங்கீர்த்தனம்"**

**சைவசித்தாந்த பண்டிதர் செந்நாப்புலவர்,**
**வர்ணனைக் கலாநிதி, மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன் M.A**
**தெய்வீக பேருரையாளர், பிரதமவர்ணனையாளர் DAN TV, ஓம் TV**
**(சர்வதேச ஒளிபரப்பாளர்)**

### மகாசபை பெருந்தலைவரின் பிரார்த்தனை



உலகியல் வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற துன்பங்கள், துயரங்கள் நீங்க வேண்டுமானால் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்ற நாராயணனின் திருப்பாதங்களை வணங்குதல் வேண்டும் என்பதை "துயருறு சுடரடி தொழு தெழுமன்னே" என நம்மாழ்வாரின் பாடல் குறிப்பிடுகின்றது. பாராளும் பெருமையிலும் பார்க்க பரந்தாமன் புகழ்பாடும் பெருமை சிறப்புடையது என நினைத்து முடியையே துறந்து விட்டுச் சென்ற குல சேகர ஆழ்வார் ஸ்ரீரங்கப் பெருமான் மீது பாடிய பாடல் அவருடைய பக்தியில் உயர்வு நிலையை எடுத்துக் காட்டுகிறது.

மார்க்கண்டேய பக்த சால்ய வைசிய கோத்திரத்திலுதித்த அடியார்க்கு நல்லான் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் மகோற்சவ பெருவிழாக்கள் யாவும் சிறப்பாக அமையும் இன்றும் வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேரேறி அருள்தர வருகின்ற திவியமான திருக்காட்சி அற்புதமாக அமைந்துவிடுன்றது. எம்பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**

**நாராயணசாமி - ஸ்ரீரமேசன்**
**தலைவர்**
**(ஈழத்து திருப்பதி தேவஸ்தானம்)**

### ஈழத்து திருப்பதியானின் தேர்வடம் பிடித்து அருள்பெற வாரீர்



ஈழத்து வடபால் யாழ்மாகநகரில் கண் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீவெங்டேச வரதராஜப் பெருமாள் ஸ்ரீதேவி பூமி தேவி சமேதராஜ இன்று சித்திரத் தேர் அமர்ந்து அருள் பாலிக்கும் திருக்காட்சி காண கண் பல கோடி வேண்டும். பெருமாளின் தேர்வடம் பிடித்து அருட் கடாச்சம் பெற அனைவரும் வாரீர் வாரீர்

**"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**

**சிவதத்திரு. ப.ரிஷிகேசன்**
**செயலாளர் (ஈழத்திருப்பதி தேவஸ்தானம்)**

### மகோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



பிரம்மா விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும் மூர்த்திகளாயினும் தத்துவவெழுத்தை மாற்றியமைக்க முடியாது என்று விதியின் வலிமையின் மிகுதிப்பாடு கூறப்படுகிறது. எனவே ஊழ்வினையினை வெல்ல முடியாதா? முனித முயற்சியெல்லாம் வீணாவதா என்று வினா எழுகிறது. இதற்கான விடை வள்ளுவப்பெருந்தகை திருக்குறளில் "தெய்வத் தால் ஆகா தெனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலிதரும்" என்று கூறியிருக்கின்றார். பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம். அது எப்போது என்பதை எவரும் திடமாக அறியமுடியாது. எனவே நாம் மண்ணில் பிறந்துவிட்டோம். எமக்கு ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்து விடுபட எல்லாம் வல்ல காத்தற் கடவுளாகிய வேங்கடேச வரதராஜப் பெருமாளை இன்றைய தேர்த்திருவிழாவில் வேண்டி அவர் அருளுக்கு பாத்திரவோமாக என பெருமானின் பாதக் கமலங்களை பணிந்து ஆசிகூறி மகிழ்கின்றேன்.

**"சர்வேஜனசுகினோ பவந்து"**
**பிரம்மஸ்ரீ இ.ரமணிதரக்குருக்கள்**
**பிரதமகுரு**
**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**

### காத்தல் கடவுள் காவல் செய்ய தேரேறுகிறார்



அகில உலக இரட்ஷகன் கருணைக்கடல் நாயகன், யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜ பெருமாளுக்கு இன்று (01.10.2025) புதன்கிழமை மிகவும் சிறப்பாக தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. தர்மத்தை காக்க யுகம் தோறும் அவதரித்த பரந்தாமன் பார்த்தனுக்கு சாரதியாக கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என அனைவருக்கும் தத்தமது கடமைகளை உணர்த்திய வேங்கடவன் இன்று தேரிலேறி எம்மிடமுள்ள ஆணவம், கன்மம், மாயா மலங்களை நீக்க வருகின்றார். அவரது திருப்பாத கமலங்களை பற்றி வாழ்வாங்கு வாழ்வோமாக.

**சிவத்திரு.ப.ஜெயகிருஷ்ணா**
**பொருளாளர்**
**ஈழத்து திருப்பதி தேவஸ்தானம்**

### மண்ணில் நல்ல வண்ணம் வாழ மாலவனைப் பணிவோம்



இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறுகிறது. இந் நந்நாளில் -பகவானின் திருவருள் வேண்டி பெருமானின் சந்நிதி நாடி வருகைதந்து வழிபடும் அன்பர்களுக்கு நல்லருள் பெருக வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீதேவி பூமி தேவி சமேதரரான ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருத்தேரில் ஆரோகணி அபயம் செய்து எம்மையிங்கு காவல் செய்ய வலம் வருகின்றார். நாமும் பெருமாளின் திருப்பாதங்களில் சரண்புகுந்து நல்ல வண்ணம் வாழ்வோமாக

**"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**

**தி.சிவரூபன்**
**மகாசபை உறுப்பினர்**

### தேர்த்திருவிழா
### ஓம் TV யில் நேரடி ஒளிபரப்பு

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் 10 தினங்களும் நடைபெறும் மகோற்சவ பெருவிழாக்கள் யாவும் ஓம் தொலைக் காட்சியில் தினமும் ஒளிபரப்பாகி வரும் இவ் வேளையில் இன்று (01.10.2025) புதன்கிழமை காலை நடைபெறும் தேர்த்திருவிழா நேரடியாக ஒளிபரப்பாக வுள்ளது. நேரடி ஒளிபரப்பு நேர்முகவர்ணனையை ஓம் தொலைக்காட்சியின் பிரதம வர்ணனையாளர் வர்ணனைக் கலாநிதி, மதுரகவி, காரை, எம்.பி அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார்.

**மலராக்கம்**
**காரை மதுரகவி**

(CR/40379) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சிறுவரைக் காக்க சபதமெடுப்போம்

இன்று சர்வதேச சிறுவர் தினம். சிறுவர்களின் உரிமைகளை முன்னிறுத்தி, அவர்கள் வாழ்வைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை மீண்டும் ஒருமுறை நினைவூட்டும் நாளாக இது அமைகின்றது. ஆனால் இலங்கையில் சிறுவர்களின் பாதுகாப்பு இன்னமும் கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. நாட்டின் நாளைய தலைமுறையினரைப் பாதிக்கும் இந்த விடயம் அதிகமாகக் கவனிக்கப்படவேண்டியது என்கின்றபோதும், இலங்கையில் அவ்வாறானதொரு நிலைமை இல்லை என்பது மிகுந்த கவலைக்குரியதொன்றே.சிறுவர்களின் கல்வி, ஆரோக்கியம், விளையாட்டு, சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் பேச்சில் இருந்தாலும், அவை நடைமுறையில் பெரும்பாலும் இருப்பதில்லை. அதற்கு மேலாக, சிறுவர்களின் பாலியல் ரீதியான பாதுகாப்பு என்பதும் இலங்கையில் தீவிர சவாலுக்கு உள்ளாகியுள்ளது. அண்மைய ஆண்டுகளில் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறார்களின் எண்ணிக்கை கவலைதரும் வகையில் உயர்ந்துவருகின்றது. அதேநேரம், குறைந்த வயதில் கர்ப்பம் தரிக்கும் சிறுமிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதானது, சிறுவர்கள்மீதான பாலியல் துஷ்பிரயோகத்தின் தீவிரத்தையும் அதன் விளைவுகளையும் வெளிப்படுத்துகிறது. இது சட்டரீதியான பாதுகாப்பில் உள்ள பலவீனத்தையும், சமூகத்தில் காணப்படும் விழிப்புணர்வுப் பற்றாக்குறையையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் சிலநாள்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்தொன்றையும் இங்கு கவனத்தில் கொள்வது அவசியம். கடந்த ஆண்டில் மட்டும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான, 10 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று சிறுவர் அதிகார சபையின் தரவுகளை அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். இது இலங்கையில் சிறுவர்களின் பாதுகாப்பு எந்தளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என்பதைத் தெளிவாகவே காட்டுகின்றது. கடந்தகால இலங்கை அரசாங்கங்கள், சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதிலும், சிறுவர் பாதுகாப்பு சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும், கல்வி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலும் மெத்தனப்போக்கை காட்டின என்றே கூறலாம். வாக்குறுதிகள் நிறைய அளிக்கப்பட்டாலும், நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் மிகவும் குறைவாகவே இருந்தன. இதனால் சிறுவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் ஏறுமுகத்திலேயே இருக்கின்றன. இதைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியம். தற்போதைய அரசாங்கத்துக்கு இதைச்சீர் செய்யவேண்டிய கடமையும், புதியசட்ட மற்றும் கொள்கை வடிவமைப்புகள்மூலம் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பும் இருக்கின்றது.

மறுபுறத்தில், சிறுவர்களின் பாதுகாப்பு என்பது வெறும் அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல. அது குடும்பங்களின், சமூகத்தின் மற்றும் ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். பெற்றோர் தங்கள் குழந்தைகளை அன்புடன் கவனித்து, அவர்களின் பிரச்சினைகளைக் கவனித்து, பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டியது அவசியம். கல்வி நிறுவனங்கள் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை பரப்ப வேண்டும். நாட்டின் சிறந்த எதிர்காலம், இன்றைய சிறுவர்களின் பாதுகாப்பிலும், அவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதிலும்கூடத் தங்கியிருக்கின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது. சிறுவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், கல்வி மற்றும் ஆரோக்கியம் நிறைந்த சூழலில் வளர்ந்தால்தான் அவர்கள் நாளைய தலைவர்களாக மாறமுடியும். ஏடுதூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவர்களே நாடு காக்கும் தலைவர்களாக நாளை மலரப்போகிறார்கள். அதை உணர்ந்து அரசாங்கமும், சமூகமும், பெற்றோரும் தங்களது பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும். அனைவரும் தங்களின் பொறுப்புணர்ந்து செயற்பட்டு சிறுவர்களுக்கு பாதுகாப்பான - மகிழ்ச்சியான உலகை வழங்குவோம் என்று இன்றைய சிறுவர் தினத்தில் அனைவரும் சபதம் எடுத்துக்கொள்வோம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஒரு நொடி காலம்தான் என்றாலும்
அதை தனக்குத் தகுந்தவாறு
சாதகமாக்கிக்கொள்பவனே புத்திசாலி.

– கதே –




# 594,368 மில்லியன் நட்டத்தை எதிர்கொண்ட மின்சாரசபை



**கொழும்பு, ஒக்.1**
**2015ஆம் ஆண்டைத் தவிர 2014ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுவரை இலங்கை மின்சாரசபை 594,368 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது என்று கோப் குழுவில் தெரியவந்துள்ளது.**

இலங்கை மின்சாரசபையின் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை தொடர்பாக ஆராயும் நோக்கில் கோப்குழு அதன் தலைவர் நிஷாந்த தலைமையில் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் கூறியது.
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் அடிப்படையில் இந்த நட்டத்துக்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள கோப் குழு, நிறுவனத்தில் ஊழியர்கள் இருக்கும் போது சபையின் சில செயற்பாடுகள் வெளித்தரப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது.
இதுபோன்ற தொடர்ச்சியான நட்டங்கள் காரணமாக 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணங்கள் அதிகளவில் அதிகரித்துள்ளன. அதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர் என்றும்கோப்குழுசுட்டிக்காட்டியுள்ளது.
ஆயினும் 2023ஆம் ஆண்டுக்குப் பின்னர் மின்சாரசபை இலாபம் ஈட்டும் நிலைக்குச் சென்றுள்ளது. (எ-இ)

# பயணச்சீட்டு இன்று முதல் கட்டாயம்!

கொழும்பு,ஒக்.1
பேருந்துகளில் பயணிப்பவர்களுக்கு இன்று முதல் பயணச்சீட்டு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
பயணச்சீட்டின்றி பயணிப்பவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படும் என்று மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.
அதேவேளை பேருந்துகளில் பயணிப்பவர்களுக்கு பயணச்சீட்டு வழங்காத நடத்துநர்களுக்கும் தண்டம் விதிக்கப்படும் என்று சபையின் செயற்பாட்டு முகாமையாளர் ஜீவிந்த கீர்த்திரத்ன தெரிவித்துள்ளார். (க-இ)

# சிறுவயதுக் கர்ப்பம்; அநுராதபுரத்தில் அதிகம்

அநுராதபுரம் ,ஒக்.1
அநுராதபுரம் மாவட்டத்தில் கடந்த வருடங்களைவிட இந்த வருடம் சிறுவயதுக் கர்ப்பங்கள் அதிகரித்துள்ளது. இது கடுமையான சமூகப்பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சிறுவர்கள் சமூக ஊடக வலையமைப்புகளை அதிகம் பயன்படுத்துவதால் தவறான பாதையில் சென்று ஆபத்தில் சிக்குகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# மரக்கறி விலை சரிவு



கொழும்பு,ஒக்.1
கடந்த சில நாள்களாக மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளதாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. சந்தைக்கு அதிகளவில் மரக்கறிகள் வந்துசேர்வதால் அவற்றின் விலை குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)



# இலங்கைக் குற்றவாளிகள் வெளிநாடுகளில் கைது!

கொழும்பு, ஒக்.1
இலங்கையில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொலிஸாரால் தேடப்பட்டுவந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களைச் சேர்ந்த நான்கு பேரை இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸ் கைது செய்துள்ளது. அவர்கள் டுபாய் உள்ளிட்ட 4 நாடுகளில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் பெயர்களை வெளியிடாமல் இருக்கப் பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - புரட்டாதி 16
02.10.2025
சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2026 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத்தரிப்பிடங்கள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2026.01.01ஆம் திகதி தொடக்கம் 2026.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 01.10.2025 – 14.10.2025 பி.ப 12.30 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 15.10.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 15.10.2025 பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 15,084,000.00 | |
| 2 | சுன்னாகம் பொதுச்சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 584,800.00 | |
| 3 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 222,200.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை - 01 | 1,000.00 | 10,000.00 | 4,345,000.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 451,000.00 | 250.00 |
| 6 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 308,600.00 | 250.00 |
| 7 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 45,600.00 | 250.00 |
| 8 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 226,125.00 | 250.00 |
| 9 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 181,450.00 | 250.00 |
| 10 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 242,000.00 | 250.00 |
| 11 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 62,700.00 | |
| 12 | ஆலடிச்சந்தை | 750.00 | 7,500.00 | 106,400.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 42,364,800.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 3,520,600.00 | |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 58,300.00 | |
| 4 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 1,061,500.00 | 250.00 |
| 5 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 263,150.00 | 250.00 |
| 6 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 83,200.00 | |
| 7 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 54,650.00 | |
| 8 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 660,000.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 2,614,700.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 386,100.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 36,600.00 | 250.00 |
| 4 | ஏழாலை மயிலங்காடு மரக்கறி சந்தை | 750.00 | 7,500.00 | 72,000.00 | |
| 5 | ஏழாலை மயிலங்காடு மீன்சந்தை | 750.00 | 7,500.00 | 72,000.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2025.10.27ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2025.10.27ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தி. பிரகாஷ்**
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

01.10.2025

## சைவபரிபாலன சபையில் ஏடு தொடக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.1
யாழ்.சைவபரிபாலனசபையில் நவராத்திரி விழாவின் இறுதிநாளான விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.
அத்துடன் அறநெறி மற்றும் பரதநாட்டிய வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர். மேலதிக விவரங்களுக்கு 02122276 78 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சைவபரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச-25)

## இந்தியாவுக்குள் நுழைந்த இலங்கையர் மூவர் கைது

கொழும்பு,ஒக்.1
சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக இந்தியாவிற்குள் நுழைந்த மூன்று இலங்கையர்களை இந்திய மத்திய குற்றப்பிரிவு பெங்களூரில் வைத்து நேற்றுமுன் தினம் கைது செய்துள்ளது.
அவர்களிடமிருந்து இந்திய மத்திய குற்றப்பிரிவு அதிகாரிகள் 13 கையடக்க தொலைபேசிகளையும் மீட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## பிரசன்ன ரணவீரவுக்கு நிபந்தனையுடன் பிணை

கொழும்பு,ஒக்.1
அரசுக்குச் சொந்தமான காணியைப் போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனைசெய்த குற்றச்சாட்டின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவைக் கடுமையான பிணை நிபந்தனைகளின்கீழ் பிணையில் விடுவிக்க கம்பஹா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
அதன்படி, ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் ஒரு ரொக்கப் பிணை மற்றும் தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் ஐந்து சரீரப் பிணைகளில் விடுவித்ததுடன் வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## யாழ்.மாவட்ட மகளிருக்கு வாழ்வாதார உதவித்திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.1
மகளிர் விவகார அமைச்சு, வடமாகாணசபை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், வடமாகாண மகளிருக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் அரியாலையில் அமைந்துள்ள வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 44 பயனாளிகளுக்கு மொத்தமாக 3.5 மில்லியன் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இரா.சந்திரசேகர், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 12 . 1955

இறப்பு 28 . 09 . 2025

**யோகராஜா சந்திரா**

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாவும் தாவடி வீதி, சுதுமலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட யோகராஜா சந்திரா கடந்த 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், கிருஸ்ணர் - நல்லம்மா தம்பதியரின் அருமை மருமகளும், கிருஸ்ணர் யோகராஜாவின் அன்பு மனைவியும், கிருஷா, சுசிலா, பிரேமசந்திரன், விஜிதா ஆகியோரின் அன்பு சகொதரியும், தாட்ஷாயினி (பிரான்ஸ்), ரசனா (லண்டன்), ரஸ்னா, ஜிந்துஷா (இத்தாலி), ஹனுசியா, பிரகலாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், டெனிஷன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தன், சுலக்ஷன் (இத்தாலி), பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷர்வின், ஷாய்சா, சரணி, அஜய் சன்ஜய், கபிஸ்சன், நிதேஸ், ஹனோமி, சாய்ஸ்வின், சாய்ஸ்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 4121) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 02 . 1957

உதிர்வு 30 . 09 . 2025

**இரவீந்திரன் மங்கள பூபதிஅம்மா**

உண்டுவத்தை அல்வாயை பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு உண்டுவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இரவீந்திரன் மங்களபூபதி அம்மா (பெரியம்மா) அவர்கள் நேற்றையதினம் (30.09.2025) செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரவீந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - இராசதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், ஜெயந்தி (சுவீடன்), பாஸ்கரன் (லண்டன்), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராஜா (சுவீடன்), நித்தியகலா (லண்டன்), அனுஷாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், காருஜன், அபிஸ்னா (சுவீடன்) இன் பாசமிகு அம்மம்மாவும், திவ்யா, சோபியா, அஸ்மியா, ஆரபி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், கோபாலகிருஷ்ணன், கனகாம்பிகை, துரைச்சாமி (அமரர்), ஈஸ்வரி, கலாராணி, தங்கராஜா, தபேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் உண்டுவத்தை அல்வாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(தமயந்தி தசரதன்) பெறாமகள்
077 572 9750

தகவல் :
குடும்பத்தினர்


# பொலிஸாரை அழைக்க துரித இலக்கங்கள்

*கொழும்பு,ஒக்.1*

*பொலிஸ் திணைக்களத்தின் புதிய துரித அழைப்பு இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

*அதன்படி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் அறிவிக்க-109, குற்றச்செயல்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு - 119, ஏதேனும் சட்ட விரோதச் செயற்பாடு தொடர்பில் தமிழ்மொழியில் தகவல்களை வழங்குவதற்கு - 107, பொலிஸார் மேற்கொள்ளும் ஏதேனும் மோசடிகள், இலஞ்சம் கோரல் போன்ற தகவல்களை வழங்குவதற்கு - 1997 ஆகிய துரித அழைப்பு இலக்கங்கள் வகைப்படுத்தப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. (ச-அ)*

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 01 . 1949

மறைவு 30 . 09 . 2025

**பாவிலு தீமோத்தேயு**

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் Sri Lanka Telecom Ltd.)**

குளமங்கால் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கணேஸ்வரம் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு தீமோத்தேயு (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் Sri Lanka Telecom Ltd) அவர்கள் நேற்று (30.09.2025) செவ்வாய்க்கிழமை விண்ணகமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலு - சிசிலியா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நாகன் - தெய்வானை தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், திரவியநாதன் (மன்னார்), இரத்தினராசா (மன்னார்) ஆகியோரின் அருமை சகோதரரும், யஸ்டீபன், றாஜீவ் (சமுர்த்தி உத்தியோகத்தர்), சாருண்யா (பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கோகிலா (ஆசிரியர், யாழ்ரன் கல்லூரி, காரைநகர்), மேரி ஆசா (முன்பள்ளி ஆசிரியர், தெல்லிப்பளை), லோகேஸ்வரன் (பிரதே செயலகம், தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கசன்றா, ஆதர்சன், அக்ஷிதா, கலிஸ், அற்றிக், தரணிகன், மதுளிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.10.2029) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : **குடும்பத்தினர்.**

(CS 4119) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 07 . 1957

மறைவு 28 . 09 . 2025

**கணபதிப்பிள்ளை தேவராசா**

மாசியப்பிட்டியை பிறப்பிடமாகவும் உடுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தேவராசா கடந்த (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான துறைராசா - சிவமலர் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற வத்சலாவின் அன்புக் கணவரும், ஜீவனா (கனடா), ஜீவாகரன், சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சனகன், சரன், இசை, சாயகி ஆகியோரின் பாசமிகு பேரனும், ரகுநாதன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் திருக்குமார் (லண்டன்), தரிசினி, காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரறாஜசிங்கம் - ஞானேஸ்வரி (கனடா), பாக்கியராஜ் - சுமதி (கிளிநொச்சி - அக்கராயன்) ஆகியோரின் பாசமிகு சம்பந்தியும், கௌரிசங்கர் (கனடா), கிருபாஜினி (கிளிநொச்சி - அக்கராயன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (உடுவில்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 88 09 239

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## பகிரங்க ஏல அறிவித்தல்

எமது சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட வாகன ரயர்கள், பழைய பத்திரிகைகள், தார் பரல்கள், வெட்டப்பட்ட மரங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விடப்பட உள்ளது.

காலம் : 2025.10.15 (புதன்கிழமை)

நேரம் : மு.ப 10.30

இடம் : தலைமை அலுவலகம் , வலிகாமம் வடக்கு பிரதேசசபை , காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்கக்கூடிய கட்டணம் ரூ. 1000.00 ஐயும் , மீளளிக்க முடியாத படிவக்கட்டணம் ரூபா 250.00 ஐயும் தலைமை அலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை கொல்லங்கலட்டியில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். சித்தி பெறும் கேள்விதாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். குறித்த ஏலத்திற்கு விடப்படும் பொருட்களை சபையின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக தகவல்களுக்கு 0212241130.

சோ.சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை

(CR/46375) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

வெறும் பேச்சினால்
ஒருபோதும் எதையும்
கற்றுக்கொள்ளமுடியாது,
கேள்விகளைக் கேட்கும்போது
மட்டுமே விஷயங்களைக்
கற்றுக்கொள்ளலாம்.

- லூ ஹோல்ட்ச்



# திருகோணமலையில் தனித்துவப் பண்பாட்டியல் கும்பவிழா!

■ எஸ்.கீதபொன்கலன்

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்தவகையில் திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான அடையாளமாக விளங்குவது கும்பவிழாவாகும். நாம் இங்கு கும்பவிழா என அழைத்தாலும், 'கும்பம்' என்பதே இங்கு பொதுப்படையான வழக்கு.

திருகோணமலை மாவட்டத்தில் நகரத்திலும் நகரை அண்டிய பகுதிகளிலும், தம்பலகாமத்திலும், மூதூர் கிழக்கிலும், நிலாவெளியிலும், சாம்பல் தீவிலும் கும்பவிழா பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. மூதூர் கிழக்கில் வரலாற்றுப் பழமை மிக்கதும் தொன்மமரபு சார்ந்ததுமான கிராமங்களான சேனையூர், கட்டைபறிச்சான், மருத நகர், கல்லம்பார் அம்மன் நகர், கடற்கரைச் சேனை, சாலையூர், சந்தோசபுரம் ஆகிய இடங்களில் கும்பவிழா மிகச்சிறப்பாக பரம்பரை பரம்பரையாக கொண்டாடப்பட்டுவருகின்றது.

கும்பத்து மாலில் தொடங்கிய இந்த மரபு இன்று பெரும் சமஸ்கிருதமயப்பட்ட ஆலயங்களுக்குள்ளும் தன் செல்வாக்கு வீச்சை வெளிப்படுத்தி நிற்கிறது. நகரை அண்டிய பகுதிகளான சல்லி, புளியங்குளம், லிங்கநகர், சாம்பல்தீவு ஆகிய இடங்களிலும் நகரத்தில் கும்பத்து மால், திருக்கடலூர் பேச்சியம்மன் கோயில், காளி கோயில், பத்தாம் நம்பர் கண்ணகியம்மன், வடபத்திர காளிகோயில், வராகி கோயில், மடத்தடி மாரியம்மன், மனையாவெளி மாரியம்மன், வில்லூன்றிக் கந்தசாமி கோயிலடி வைரவர், உவர்மலை கண்ணகி அம்மன் கோயில் என நீட்சி கண்டுள்ளது.

கும்பம், கும்பத்துமால், சாமியாட்டம், சாட்டையடி, மறிப்புக்கட்டு, தீத்தச்சட்டி, மறிப்பை முறித்தல், கட்டை வெட்டுதல், உருவேற்றுதல், மந்திரம், மந்திர உச்சாடணம், மடை, சிலம்பு, பறை உடுக்கு, பூசாரி, இணைப்பூசாரி என இதனோடு இணைந்துவருகின்ற கலைச்சொற்களின் பட்டியல் நீளும்.

கும்பம் பற்றி திருகோணமலைப் பண்டிதர் வடிவேல், இது சீக்கியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது எனக் குறிப்புகளில் எழுதியுள்ளார். ஆனால் சீக்கியரது மத அனுஷ்டாணங்களிலோ அவர்களது கலை நிகழ்வுகளிலோ இத்தகைய கலாசார அடையாளங்களைக் காணமுடியவில்லை. அவர்களது நடனமான பங்காரா நடனமும் அதனோடு இணைந்த துள்ளல் இசையும் அமைந்திருக்கிறது. அத்துடன் அவர்களது சடங்கு முறைகளில் கும்பம் போன்ற எந்த ஆதாரத்தையும் காணமுடியவில்லை. எனினும் பிரித்தானியரின் ஆட்சியின்போது திருகோணமலை கடற்படைத்தளத்தில் சீக்கிய படையினர் பணியாற்றினர். அவர்கள் நவராத்திரி பூஜையின் நிறைவுநாளில் ஒன்பது தினமாக பூசித்த கலசத்தை (கும்பத்தை) ஊர் வலமாக எடுத்துச்செல்லும் முறை இருந்தது என்று செவிவழி வரலாறு ஒன்று திருமலையில் சொல்லப்படுகின்றது. இலங்கையில் திருகோணமலை தவிர்த்து வேறு எந்த மாவட்டத்தில் மட்டுமின்றி இந்தியா உட்பட உலகின் வேறு எந்த நாட்டிலும் கும்பவிழா நடைமுறையில் இல்லையென்றே சொல்லலாம். மட்டக்களப்பில் கும்பம் சொரிதல் நடைமுறையில் உள்ளது. மாரியம்மன் பேச்சியம்மன் சடங்குகள் முடிவடையும் கடைசிநாளில் கடலில் அல்லது ஆற்றில் கும்பம் சொரிதல் சடங்கு நடைபெறும். அதற்கும் திருகோணமலையில் நடக்கும் முறைமைகளுக்கும் நிறையவே வேறுபாடு காணப்படுகிறது. திருகோணமலையில் நடைபெறும் கும்பவிழா நவராத்திரியோடு தொடர்புபட்டது. மட்டக்களப்பு கும்பம் சொரிதல் வைகாசி, ஆனி மாதங்களில் நடைபெறும்.

**கும்பம் எடுத்தல், கும்பம் தூக்குதல் என்ற நிகழ்வில் பூசாரியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உருவகப்படுத்தி அவர்கள் மீது மந்திரங்களை உச்சாடனம் செய்து ஏற்றுகிறார்களோ, அதன் மூலமாக அந்தத் தெய்வங்கள் பற்றிய ஐதீகங்களையும், புராணங்கள் கதைகள் கூறுகின்ற குணாம்சங்களையும் உள்வாங்குகிறார்கள்.**

மாரியம்மன் சடங்குகளோடு தொடர்புபட்டு நிற்கிறது. கும்பவிழா எப்போது தொடங்கியது என்ற கேள்வி பலர் மனதிலும் எழுவது இயற்கையே. சடங்குகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் தொடக்கமென்ன? முடிவென்ன? என அடிமுடி தேடமுடியாது. சடங்குகளும் நம்பிக்கைகளும் மனித நாகரிகத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளே. அவை காலங்காலமாக பல தலைமுறைகள் தாண்டி நீண்டு செல்லும் மரபுகள் கொண்டவை. திருகோணமலை கும்பவிழாவும் அத்தகையதே. இத்தகைய கேள்விகளும் விடைகளும் இருந்தாலும் மூலத்தைத் தேடுதல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கேரளாவில் நடைமுறையில் உள்ள சடங்குகளில் நாம் இந்த முறையிலான அமைப்பைக் காணலாம். தேயாட்டம், ஒட்டம், துள்ளல் பகவதி அம்மனுக்கு நடக்கும் சடங்குகள் நம் கும்ப சாயலைக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேசமும் தமக்கான பண்பாட்டு மரபுகளை தமக்குள்ளாகவே உருவாக்குகின்றபோதும், வேறொரு பண்பாட்டிலிருந்து வருகின்றவைகளையும் உள்வாங்கிக்கொண்டு, புதிய வடிவமாய் பரிணமிக்கின்றமையையும் உலகப் பண்பாட்டு வரலாறு உணர்த்தி நிற்கின்றது. பொதுவாக, தென்னாசிய மரபுக் கலைகள் சடங்குகளின் அடிப்படையிலேயே உருவாகியிருக்கின்றன. கும்ப விழாவும், ஒரு சடங்காகவும் கலையாகவும் வெளிப்படுவதை நாம் காணலாம். தென்னாசிய மரபில் சடங்குகள் கலையோடு இணைந்தே ப்யில் நிலையில் உள்ளன. கும்பவிழா ஒன்பதுநாள் சடங்கும் அதனோடிணைந்து வருகின்ற பூசைகளும், சாமியாட்டமும் மனிதனின் நம்பிக்கையின் வழிவந்த கலையின் சங்கமிப்பே. சடங்குகளின் அடிப்படையிலேயே கலைகளின் உருவாக்கம் என்பது உலக வரலாற்றில் நாம் கிரேக்கத்தில் டயோனிசஸ் தெய்வத்துக்குச் செய்கிற சடங்குகளே நாடகமாக உருமாறுவதையும், ரோமானிய மரபில் வீனஸ் தெய்வத்துக்குரிய சடங்குகளும், எகிப்தின் பழைமை மிகு நாடக உருவாக்கமும் கலைகளின் உருவாக்கத்தால் சடங்குகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இங்கு கும்பமும் இன்றுவரை சடங்காகவும் கலையாகவும் தொடரும் இரு பண்பாட்டுக் கையளிப்பாகவும் அமைந்துள்ளது. ஆசிய மரபில் சீன நடனங்கள், ஜப்பானிய மரபில் நோ கபுகி நடன நாடக முறைமைகள், இந்தோனேசிய பாலித்தீவு நடனங்கள், தாய்லாந்தின் நடன முறைமைகள் சடங்காக உருவாகி கலையாக மாறியவையே. இன்றும் அவற்றுள் சில கலையாகவும் சடங்காகவும் தொடர்வதை நாம் காணலாம். ஏன் சிங்கள மரபில் பல்வேறு கலைகளையும் பயின்று அதன் வெளிப்பாடாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். கும்பம் எடுத்தல், கும்பம் தூக்குதல் என்ற நிகழ்வில் பூசாரியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உருவகப்படுத்தி அவர்கள் மீது மந்திரங்களை உச்சாடணம் செய்து உருவேற்றுவார், அதன் மூலமாக அந்தத் தெய்வங்கள் பற்றிய ஐதீகங்களையும், புராணங்கள் கதைகள் கூறுகின்ற குணாம்சங்களையும் அவர்கள் உள்வாங்குகிறார்கள். பின்னர் ஆடுகிறபொழுது அந்த தெய்வமாகவே தங்களை உருவகித்துக்கொண்டு ஆடுகிறார்கள். பரம்பரையாக தங்கள் குலமரபுத் தெய்வங்களையும் வெளிப்படுத்துவர். உதாரணமாக மாரியம்மன் என்றால் மிகவும் நளினமான ஆட்டம் வெளிப்படும். காளியென்றால் மிகவும் ஆக்ரோசமான ஆட்டத்தைக் காணலாம். அந்தந்த கடவுளர்களை உருவகித்துக்கொள்ளல் இங்கு முக்கியப்படுகிறது. ஒரு நாடக நெறியாளன் எப்படி ஒரு பாத்திரத்துக்கான குணாம்சங்களை நடிகர்களுக்குச் சொல்லிக் கொடுப்பானோ அதேபோலவே மந்திரம்மூலம் ஒரு பூசாரி அந்தத் தெய்வத்துக்குரிய மந்திரங்களை உச்சாடனத்தில் அழைக்கிறபொழுது அந்தத் தெய்வமே எழுந்து வருகிறது போல அமையும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சமாய் விக்கினேஸ்வரா

## விதைத்த செம்மல் முருகேசு கனகசபை

■ சுந்தரலிங்கம் தியாகலிங்கம்

மாட்டு வண்டிச் சக்கர ஓசையும், சிறாரின் மண்பிசைந்து விளையாடும் விளையாட்டொலியும் நிரம்பிய ஒரு காலகட்டத்தில், தொல்புரம் கிழக்கு கிராமத்தில் கல்விப்பிரகாசம் பரப்ப ஒரு சுடர் பற்றியெரிந்தது. அந்தச்சுடரின் பெயர் அமரர் முருகேசு கனகசபை. இன்று, அந்தச்சுடர் ஒரு கலங்கரை விளக்கமாகப் பெருகி, தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை என்ற பெயரில் 95 ஆண்டுகால சரித்திரப் பெருமையுடன் விளங்குகிறது.

### திண்ணையில் தொடங்கிய வித்தை

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்விக்கே முன்னுரிமை இருந்தது. வசதிபடைத்த சிலரே கல்வி கற்க முடிந்த அந்தநாளில், கிராமத்துப் பிள்ளைகள் கல்வி வளம் பெறாது போகும் நிலை முருகேசு கனகசபையின் இதயத்தை வருத்தியது. இதன் விளைவாக, 1928ஆம் ஆண்டே, பள்ளி என்று ஒரு தனிக் கட்டடம் இல்லாமல், தனது சொந்த இல்லத்தின் திண்ணையையே முதல் வகுப்பறையாகக் கொண்டு ஒரு திண்ணைப் பள்ளியை துவக்கினார். முருகேசு உபாத்தியாயராகவும், இராமலிங்கம் வேலுப்பிள்ளை (கண்ணா ரொபி) முதல் மாணவராகவும் அப்பள்ளி இயங்கியது. இந்தத் தனிப்பட்ட முயற்சியே பின்னணியாக அமைந்து, 1930ஆம் ஆண்டில் ஒரு நிரந்தரப் பாடசாலை நிறுவ வழிவகுத்தது.

### சமூகத்தின் இதயத்துடிப்பு

1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம், துரையன் வளவுப் பிள்ளையார் மண்டபத்தில் கூடிய கிராம மக்கள், ஒரு சைவப் பாடசாலையின் தேவையை உணர்ந்து, அதை நிறுவத் தீர்மானித்தனர். த.பே.வைத்திலிங்கம், அ.கந்தையா, சு.முத்துக்குமாரு, கி.நவரெட்ணம் போன்ற கிராமத்தலைவர்கள் முருகேசு கனகசபைக்கு முழு ஒத்துழைப்பை வழங்கினர்.

இறுதியாக, 1930ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி, 4 பரப்புக் காணி நிலத்தில் கட்டப்பட்ட நிரந்தரக் கட்டடத்தில், 'தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்' சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் க.சிவபாதசுந்தரம்பிள்ளையின் கரங்களால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. தொடக்கத்தில் இருந்தே அதன் முதல் ஆசிரியராக முருகேசு உபாத்தியாயர் பொறுப்பேற்றார்.

### தலைமுறை தாண்டிய அர்ப்பணிப்பும் வளர்ச்சியும்

1931ஆம் ஆண்டில் நிறுவுநரின் மறைவுக்குப் பிறகு, வித்தியாசாலையின் நிர்வாகம் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இலகுப்பிள்ளை இராமலிங்கம் அதிபராகப் பொறுப்பேற்றார். எனினும், நிறுவுநரின் குடும்பத்தின் அர்ப்பணிப்பு என்றும் நின்றதில்லை.

வித்தியாசாலையின் முன்னேற்றத்தில் நிறுவுநரின் பிள்ளைகள் மற்றும் வழிப்பேரர்கள் இன்றுவரை ஈடுபாட்டுடன் உள்ளனர். இதற்கென, நிறுவுநரின் பேர்த்தி திருமதி கிருஷ்ணானந்ததேவி பரமேஸ்வரனால் தற்போதைய அதிபர் அலுவலகக் கட்டடம் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. வித்தியாசாலையின் 90ஆவது ஆண்டுநிறைவில், நிறுவுநரின் ஞாபகச் சிலை பாடசாலை முன்றலில் பூங்காவின் மையத்தில் அமைக்கப்பட்டது. அந்தச் சிலை, அவர் தன் கண்ணெதிரே நின்று வித்தியாசாலையை நடத்துவது போன்ற அகவுணர்வை ஊட்டும்வகையில் அமைந்துள்ளது.

கீரிமலை சிவன்கோயிலுக்கு அருகில் கிருஷ்ணப்பிள்ளை மடம் ஒன்றை முருகேசு கனகசபை நடத்தி ஆடி அமாவாசை உற்சவத்தில் அன்னதானம் வழங்கி வந்தார். அதில் இன்று அவரது பேர்த்தி திருமதி கிருஷ்ணானந்ததேவி பரமேஸ்வரனின் நிதிப்பங்களிப்பில் சிவபூமி இல்லத்துக்கு தருமசாதனமாக வழங்கப்பட்டதும் தற்போது முதியோர் இல்லம் கிருஷ்ணப்பிள்ளையின் நாமம் பொறிக்கப்பட்டு சிறப்பாக இயங்குவதும் குறிப்பிடத்தக்கது.

மடத்தைப் பராமரிப்பதற்காக புலோப்பளையில் 231 பரப்புக் காணியை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்தக் காணியில் 2011ஆம் ஆண்டில் 52 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டமை இத்தருணம் நினைவுகூரத்தக்கது.





### 95 ஆவது ஆண்டு நோக்கம்: நூற்றாண்டை நோக்கி

2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியாகிய இன்று, வித்தியாசாலை தனது 95ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. நிறுவுனர் அமரர் முருகேசு கனகசபையின் 'சிறந்த நன்மாணாக்கர்களை உருவாக்கும்' உயரிய நோக்கம் நிறைவேறுவதே எல்லோரதும் வேண்டுதல். இந்த வரலாற்று மைல்கல்லைத் தாண்டி, நூற்றாண்டு வரை பாரிய மாற்றங்களையும், சிறந்த பெறுபேறுகளையும் அடைய வித்தியாசாலை தவறாது என்பதில் நம்பிக்கை உள்ளது. தங்களது அர்ப்பணிப்பான பணிகளை நிறுவுநரின் பூட்டப்பிள்ளைகளும் தொடர்வர்.

### நிறைவாக:

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலையின் வரலாறு என்பது ஒரு தனிநபரின் கனவும், ஒரு சமூகத்தின் இதயத்துடிப்பும், பல தலைமுறைகளின் அர்ப்பணிப்பும் கலந்து உருவான ஒரு கல்விக் காவியமாகும். ஒரு திண்ணைப் பள்ளியாகத் துவங்கிய பயணம், இன்று 95 வருடங்களின் கனவான வேரோடு நின்று, எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு சக்தியாகத் திகழ்கிறது என்றால், அதில் மிகையில்லை. ■






## சிங்காரச் செல்வங்களே...

சின்னஞ்சிறு பிள்ளைகளே சிங்காரச் செல்வங்களே
சித்திரப்பூம் புன்னகையைச் சிந்துகின்ற முல்லைகளே
அன்னைமொழி தன்னைக்கேட்டு அன்றாடம் வாழுங்களே
அன்புமொழி பேசுகின்ற அழகான கிள்ளைகளே
கல்வியினை வெல்ல இங்கு செல்வங்கள் ஏதுமுண்டோ?
அன்றாடம் கல்விவழி நின்றொழுகி இன்புறுங்கள்
ஏழ்மையிலும் கைகொடுத்து ஏணிபோல் உயர்த்திவிடும்
வாழ்வெல்லாம் துணையாகும் வற்றாத கல்விச்செல்வம்

கோபத்தை வெல்லும் தெய்வகுணாம்சம் கொண்டிடுங்கள்
ஆபத்தில் பிறர்க்குதவும் அன்புமனம் கண்டிடுங்கள்
எப்போதும் சாந்தகுணம் எல்லோர்க்கும் சொந்தமானால்
இப்புவியே சொர்க்கமாக என்றென்றும் வாழ்ந்திடலாம்
ஊறுசெய்ய எண்ணாத உத்தமனாய் வாழ்வதுவே
பேறுகளில் பெரும்பேறு பெருவாழ்வும் அதுதானே
ஐக்கியத்தின் மேன்மையினை அறிவாலே கண்டுகொண்டால்
மக்களெல்லாம் ஒருதாயின் மைந்தர்களாய் வாழ்ந்திடலாம்

எங்கெங்கு பிறந்தாலும் எல்லோரும் அன்புகொள்ளும்
தங்கமனம் கொண்டவர்கள் தாரணியில் மேலோர்கள்
போட்டி பொய் பொறாமை வளர் காட்டுமனம் இல்லாத
நாட்டுக்கே நன்மை தரும் கூட்டுறவு கொள்வோமே
குற்றம்குறை காணுகின்ற கொள்கை பெரும் கேடாகும்
பற்றுடனே அறிவுரைக்கும் பண்புக்கெது ஈடாகும்
சட்டம் மனுதர்மநெறி சத்தியத்தைக்காத்தவரின்
எட்டுத்திக்கும் புகழ் மணக்கும் இதயம் இன்ப வீடாகும்

ஆனையூர்க் கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் பவளவிழாக் கொண்டாட்டம்; ஞாயிறன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 1

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் பவள விழாக் கொண்டாட்டம் தொடர்பான விரிவான கலந்துரையாடல், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தொழிற்சாலை அன்னதான மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் பவள விழாக் கொண்டாட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தொழிற்சாலை அன்னதான மண்டபத்தில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது, விழாவை சிறப்பாக நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு, ஒழுங்கமைப்புப் பணிகளுக்காகத் தனியான குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், உள்நாட்டு, வெளிநாட்டு முன்னாள் ஊழியர்களுக்கும் இந்த விடயம் சம்பந்தமாக அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் பவள விழாக் கொண்டாட்டம் தொடர்பான விரிவான கலந்துரையாடல், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தொழிற்சாலை அன்னதான மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)




## கேதார கௌரி விரத பூஜை

அம்பாள் அடியார்களே !

02.10.2025 தொடக்கம் ஆரம்பமாகி 22.10.2025 அன்று விரதமானது நிறைவடைகின்றது.

காலை 9.30 மணிக்கு இராஜேஸ்வரி அம்பாளுக்கு ஸ்நபனாபிஷேகமும், பூஜைகளும் இடம்பெற்று எழுந்தருளியிருக்கும் கௌரி அம்பாளுக்கு விசேட தீபாராதனைகளும், பூஜைகளும், ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளும் இடம்பெற்று பின்னர் அடியார்களுக்கு மஹேஸ்வர பூஜையாகிய அன்னதானமும் இடம்பெறும்.

22.10.2025 அன்று வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்கள் திருவிளக்குப்பூஜையில் கலந்து கொண்டு காப்பு கட்டும் வைபவமும் இடம்பெறும்.

நன்றி

ஆலய பரிபாலனசபை



# தேசிய ரீதியில் சாதனை படைத்த மன்னார் தட்சணாமருதமடு ம.வி.

*மன்னார், ஒக்.1*

தேசியமட்டதைக் கொண்டோ தற்காப்புக் கலைப்போட்டியில் மன்னார் மடுக் கல்வி வலயத்துக்குட்பட்ட தட்சணாமருதமடு ம.வி. மாணவி யோ.சுடர்மதி 18 வயதுக்குட்பட்ட 52-55 கிலோகிராம் நிறைப்பிரிவில் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கி சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டி கடந்த 22ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை மாத்தறையில் நடைபெற்றது. (ச-இ)



## சிறுவர்தின விழா

யாழ்., ஒக். 1

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சனசமூக நிலையத்தலைவர் ஜெயகாந்தன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-131)

## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 10 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மூன்று மாடி கடையும், யாழ். K.K.S. வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S. வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும், யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த மாடி வீடும், யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**0777 23 25 35**

# சிறுவர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.1

சிறுவர் தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் சிறுவர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல் மற்றும் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுரு ஆதீனத்தில் ஏடு தொடக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.1

692, பருத்தித்துறை வீதி, நல்லூரிலுள்ள சிவகுரு ஆதீனத்தில் விஜயதசமி தினமான நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஏடு தொடக்கப்படவுள்ளது.

அத்துடன் சிறுவர் வகுப்பு மற்றும் ஆன்மிக வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர். தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் மற்றும் வகுப்புகளில் இணைய விரும்புவோர் 077 222 0103 எனும் ஆதீன அலுவலக இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-25)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படியில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. சபாபதி ஒழுங்கையில் இரண்டு பக்கங்கள் வீதியை கொண்டது.

தொடர்புகளுக்கு:-
077 818 4875, 077 615 6821
(CS/59545) J-1

## மானம்பூ திருவிழா

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் மானம்பூ திருவிழா நாளை வியாழக்கிழமை மதியம் 2 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது. அடியவர்களது நலன்கருதி பருத்தித்துறையிலிருந்து நாளை நண்பகல் 1.30 மணிக்கு விசேட பேருந்து சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (சு-41-100)

## வட இலங்கைச் சங்கீத சபையின் கண்ணீர் அஞ்சலி



வடஇலங்கைச் சங்கீத சபையின் நிர்வாகசபை உறுப்பினர்
**திருமதி அகல்யா இராஜபாரதி**
அவர்களின் அன்புத் துணைவர்

**அமரர் சின்னத்தம்பி இராஜபாரதி**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து எமது ஆழ்ந்த துயரத்தை தெரிவிப்பதுடன் அன்னாருடைய ஆன்மா சாந்தியடைய தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள்**
(CR 46369)A

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம் சுத்திகரிப்பு சேவை கூறுவிலை கோரல் - 2026

ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு பணிக்கு பதிவு செய்யப்பட்ட தனியார் சேவையிடமிருந்து சேவை பெறுவதற்கான கூறுவிலை கோரல்.
அலுவலக வேலை நாட்களில் இடத்தை பார்வையிட்டு உங்கள் விண்ணப்பங்களை 15.10.20.25 இற்கு முன் சமர்ப்பிக்கலாம்.

1. பணிக்கு தேவையான பணியாளர்கள், மாதாந்தம் கொடுப்பனவு தொகை.
   ஆண்-02 (ஒருவர் மேற்பார்வை)
   பெண்-02
2. சுத்திகரிப்பு மூலப்பொருட்கள் மாதாந்தம் தேவையின் பொருட்கள் பெறுமதி.
3. வேலை நேரம் - காலை 6.00 - மாலை 6.00
4. வேலையிடங்கள் - மலசலகூடங்கள், குளியலறை, வடிகான்கள், வெளிமுற்ற சுத்திகரிப்பு, கட்டிடத்தின் உட்புறம், வெளிப்புறம் சுத்திகரிப்பு.
5. காசோலை மூலம் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும்.

நேரடியாக வருகை தந்து விபரங்களையும் பெறுவதோடு, உரியகாலத்தில் கூறுவிலைகளை சமர்ப்பிக்கலாம் என்பதையும் அறியத் தருகின்றோம்.
(செ.ஸ்ரீநிவாஸன்)
தலைவர்
(CR 46370) A

## புலமை கல்வி நிறுவனம்
## PULAMAI INSITITUTE

**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புதிய வகுப்புக்கள்**

**விஜயதசமி அன்று ஆரம்பம்**

தரம் - 4 (தற்போதைய தரம் - 3)
தரம் - 5 (தற்போதைய தரம் - 4)

**ஆசிரியர் - திரு. க. கலாமோகன்**
(BA, P.G.D.E, Dip..in..Teach)

காலம் :- 02.10.2025 வியாழக்கிழமை
நேரம் :- தரம் - 4 மாலை 4.05 மணி
தரம் -5 மாலை 4.45 மணி

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் வழங்கப்பட உள்ளது.
பதிவுகளுக்கு முந்தவும்.
இடம் - சோதிவேம்படி லேன், மானிப்பாய்.
தொடர்புகளுக்கு: 077 212 1915

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 12 . 1948 — மறைவு 28 . 09 . 2025

**கனகரத்தினம் சந்தானலட்சுமி**

ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சந்தானலட்சுமி அவர்கள் கடந்த (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், சந்திரமோகனதாசன் (சுவிஸ்), கிரியா (லண்டன்), சந்திரகாசன் (லண்டன்), ராகினி (கனடா), கமலகாசன் (லண்டன்), கண்ணதாசன் (இலங்கை), றமித்தா (இலங்கை - அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண விவசாய திணைக்களம் வ.மா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதர்சினி (சுவிஸ்), பவானந்தன் (லண்டன்), கிருசாந்தினி (லண்டன்), கஜேந்திரன் (கனடா), கேதாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிரிஜன் (லண்டன்), பானுஜன் (லண்டன்), சர்ஷன் (லண்டன்), கர்னிகன் (கனடா), அக்ஷயா (கனடா), பகிஷனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் மங்கையகரசி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் யோகநாதன் (பிரான்ஸ்), கலாரதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 278 3088, 074 109 3942

35, லோட்டஸ் றோட்,
ஆறுகால் மடம்.
(CS/59537) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 10 . 1957 — மறைவு 29 . 09 . 2025

**தமயந்திதேவி கருணானந்தன் (காந்தி)**

கோவிலாக்கண்டியை பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு மற்றும் நாவற்குழியை வதிவிடமாகவும் கொண்ட தமயந்திதேவி கருணானந்தன் அவர்கள் நேற்று முன்தினம் (29.09.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - மனோரஞ்சிதம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான நிற்சிங்கம் - வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், கருணானந்தனின் அன்புத் துணைவியும், சக்திநாயகி (பட்டயக் கணக்காளர் - KPMG, கொழும்பு), நிற்சிந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும், பத்மரூபனின் (பொறியியலாளர் - கொழும்பு) பாசமிகு மாமியாரும், கௌரிதேவி (UK), பாலகேதீஸ்வரன் (Canada), காலஞ்சென்றவர்களான சாந்திநிகேதன், சாவித்திரிதேவி, மற்றும் நளாயினிதேவி, சந்திரமௌலீசன், சாயிலக்ஷ்மி ஆகியோரின் அருமைச் சகோதரியும், பத்மநாதன் (UK), கௌசலாதேவி (Canada), யோகதாசன், சிவபாலா, தயாநிதி, நேசகுமார், சரவணபவன், லோகநாதன், சிவானந்தன் (Norway), தயானந்தன் ஆகியோரின் மைத்துனியும், அதிசயசொரூபி – ஜெயந்தன் (UK), நர்த்தனசொரூபன் (USA), யோகவிநாயகன் - சுவேதா (Dubai), கார்த்திகா – கலைச்செல்வன், சிவாஜினி – கிறிஷாந்தன், சிவானுஜன் மற்றும் தானியா (Australia) ஆகியோரின் ஆசையம்மாவும் சிவகாமி – அன்ட்று (USA), சாயீசன் - மயூரி (Canada), சிவமைந்தன், கௌரிபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கக்கடை வீதி, நாவற்குழியிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (02.10.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.நி.கருணானந்தன் (கணவர்)
0777154155 / 0772291817

சங்கக்கடை வீதி,
நாவற்குழி.
(CR 46367) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணெண்ணெய்...

பட்டுள்ளன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது மாதாந்திர விலைத் திருத்தத்தை நேற்று அறிவித்துள்ளது. 92 ஒக்ரேன் பெற்றோல் விலையில் மாற்றங்கள் இல்லாதபோதிலும், 95 ஒக்ரேன் பெற்றோல் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 95 ஒக்ரேன் பெற்றோலின் புதிய விலையாக 335 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 277 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
சுப்பர் டீசலின் விலை மாற்றமின்றி நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
மண்ணெண்ணெய் விலை லீற்றருக்கு 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 180 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பட்ஜெட்டின்...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளன. இதுவரை 240 என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.
மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று பலரும் வலியுறுத்தி வரும் நிலையில், கடந்த தடவை வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பட்ஜெட் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மூன்றாம்கட்ட வழக்கு விசாரணைகளை ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கலாம் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து பட்ஜெட் தொடர்பான நகர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்காக வழக்கு இன்றைய தினத்துக்குத் தவணையிடப்பட்டது. இவ்வாறான பின்னணியிலேயே, இன்றைய வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன. எனவே, ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் இன்று ஓரளவுக்குத் தெரியவரும் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## செம்மணியில்...

அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி, செம்மணியில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுவருகின்றது. இருதினங்களுக்கு முன்னர் முடியவேண்டிய இந்தப் போராட்டத்தை, செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர் என்புத்தொகுதிகளுக்கு நீதி கோரி, சிறுவர் தினமான இன்று வரை நீடிப்பதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்திருந்தனர்.
இதன் தொடர்ச்சியாகவே, இன்று காலை முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டமும், அதைத் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டமும் இடம்பெறவுள்ளன. (அ-ம-26)

## அளவுக்கு...

வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் அரியாலையிலுள்ள வடமாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டுக்கு கூடுதலான வருவாய் ஈட்டித்தருபவர்களாக பெண்கள் காணப்பட்டபோதிலும், சில மாவட்டங்களில் பெண்களின் வாழ்க்கை நிலை மிகவும் பின்னடைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக வன்னி மாவட்டத்தில் பெண்கள் பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர். கடன்கள் காரணமாக உயிர்மாய்க்கும் பெண்களின் எண்ணிக்கை வன்னியில் அதிகளவில் உள்ளது. இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் இயலுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.
கடந்த வருடம் 3 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட பத்து வயதுக்கும் குறைவான சிறுவர்கள் இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று சிறுவர் அதிகாரசபை கூறியுள்ளது. பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையையும் விட அதிகளவானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கச் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஏனெனில், பலர் பல்வேறு காரணங்களுக்காக முறைப்பாடுகளை வழங்காமல் விட்டிருக்கலாம் - என்றார். (அ-ம-66)

## இன்றுமுதல்...

மனையில் இடமாற்றத்தில் உள்ள மயக்க மருந்து மருத்துவர் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இன்றைய தினம் அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இரண்டாவது மயக்க மருந்து மருத்துவராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். இதையடுத்தே, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சத்திர சிகிச்சைக் கூடம் இன்று புதன்கிழமை முதல் மீண்டும் தினமும் இயங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (அ-ம-66)

## குருதியில்...

வினோதரன் வினோதா (வயது-33) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
இடுப்பு வலி மற்றும் திடீர் சுகவீனம் காரணமாக கடந்த 28ஆம் திகதி அந்தப் பெண் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதன்போது, குருதியில் கிருமித் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்தநிலையில், சிகிச்சையின்போது நேற்றுக்காலை உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வேங்கடேச...

புதன்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. தேர்த் திருவிழாவை முன்னிட்டு வசந்த மண்டபப் பூஜை இன்று காலை 7 மணியளவில் ஆரம்பமாகும். நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவமும், மாலை 6 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய ஆதீனமகா சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## இலங்கையின்...

இலங்கையின் நிதி நிலைமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் சிறப்பு அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே, இலங்கையின் நிதி நிலைமை மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய தேவையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இலங்கை உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பில் ஈடுபட்டது. இது இலங்கையின் நிதி நிலையில் இருந்த உடனடி அழுத்தங்களைப் போக்குவதற்கு உதவியது. ஆனால், இலங்கை தொடர்ச்சியான நிதி ஒழுக்கத்தைப் பேணுவது அவசியமாகவுள்ளது என்றும் நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
புதிய கடன் ஒப்பந்தங்களில் இலங்கை கையெழுத்திடுவதற்கு முன்னர், செலவு மற்றும் அபாய பகுப்பாய்வு அவசியம். புதிய கடன் திட்டங்கள் நாட்டின் பொதுவான இலக்குகளுடன் ஒத்துப்போக வேண்டும். அதிக வரி விகிதங்கள், பிழையான கொள்கைகள், நிலையற்ற சந்தை போன்ற காரணிகளின் கலவையால் தான் இலங்கையில் கடன் நெருக்கடி ஏற்பட்டது என்று நாணய நிதியம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## மாவட்டத்தில்...

முல்லைத்தீவு கற்சிலைமடுவைச் சேர்ந்த பி.பானுசன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கடந்த சில மாதங்களாக சிறுநீர நோயால் பாதிக்கப்பட்டிருந்த அந்த இளைஞருக்கு, அண்மையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எனினும், சிகிச்சை வெற்றிபெறாததைத் தொடர்ந்து அந்த இளைஞர் உயிரிழந்தார்.
உயிரிழந்த இளைஞர் அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில், தொழிநுட்பத் துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

## சிறுமிமீது...

கடூழியச் சிறைத்தண்டனையை விதித்துள்ளது.
கடந்த 10 வருடங்களாக இடம்பெற்ற இந்த வழக்கு, கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, குற்றஞ்சாட்டப்பட்ட நபரை குற்றவாளி என்று அறிவித்த நீதிமன்றம் அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டது. அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டது. (அ-ம-55)

## பொருளாதார...

வற்றின் ஏற்பாட்டில், கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மத்திய நிலையத்தை மீளவும் ஆரம்பித்து வைத்தார். வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.றஜீவன், யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ்.மாவட்ட மேலதிக செயலர் (காணி) பா.ஜெயகரன், சாவகச்சேரிப் பிரதேசசபையின் தவிசாளர் பொன்னையா குகதாசன், பிரதேச செயலாளர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் வியாபாரிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
(அ-ம-131-66-20)

## பல்கலைக்கழக...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் என்பனவும் இந்தப் போராட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை இடைமறித்து நேற்று முற்பகல் 10.15 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி தி.விக்னேஸ்வரன் தலைமையில் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் போராட்டமொன்றையும் நடத்தினார்கள்.
வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தால் வவுனியா பல்கலைக்கழக வாயிலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(அ-ம-110-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரினச்சேர்க்கையை அங்கீகரிக்கும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும்!

## பேராயர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.1



ஓரினச் சேர்க்கைத் திருமணங்களைப் பதிவு செய்வதற்காக பல்வேறு வழிகளில் நாட்டுக்குள் பல செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளித்து சமூக சீரழிவை ஏற்படுத்த முயற்சிக்கும் அரச அதிகாரிகள் எந்தளவு உயர் அதிகாரத்தில் இருந்தாலும் அவர்களை ஜனாதிபதி பதவி நீக்க வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை திஹாரிய தேவாலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நாட்டில் சில சமூகச் சீரழிவுகள் இடம்பெற்றுவருகின்றன. இவை ஆட்சியமைக்கும் அரசாங்கங்களின் தீர்மானங்கள் அல்ல. குறிப்பிட்ட சில நிறுவனங்கள் அல்லது அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களாகும். ஓரின சேர்க்கையாளர்களான சுற்றுலாப் பயணிகளுக்கு எமது எதிர்காலச் சந்ததியினரை இரையாக்க முடியாது. இவை நாட்டின் கலாசாரங்களை அழிக்கும் செயற்பாடுகளாகும். நாட்டில் அதியுயர் பதவியிலிருப்பவருக்கு இது தெரியுமா என்பது எமக்குத் தெரியாது. இது தொடர்பாகத் தெரிந்தால் அதை நிறுத்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். ஓரின சேர்க்கைத் திருமணங்களைப் பதிவு செய்வதற்காக பல்வேறு வழிகளில் நாட்டுக்குள் பல செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் பெண்கள் இருவர் தேவாலயமொன்றில் அருட்தந்தையொருவரை ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டுள்ளனர். வருமானத்துக்காக அந்த க் கலாசாரங்கள் எமது நாட்டில் ஊடுருவ ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது - என்றார். (எ-இ)

# வாணி விழாவும் சிறுவர் விழாவும்

ஊரெழு கணேச வித்தியாசாலையில் வாணி விழாவும், சிறுவர் விழாவும் பாடசாலை பிரதான மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் தி.உதயசூரியன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் செ.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

## பருத்தித்துறையில்

# சட்டவிரோதமாக இயங்கிய சோதிட நிலையம் அகற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.1

பருத்தித்துறையில் இந்தியாவைச் சேர்ந்தவர்களால் அனுமதிபெறாது சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்ட சோதிட நிலையம் ஒன்று பொலிஸாரால் நேற்று முன்தினம் முற்றுகையிடப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.

இந்தியா, பெங்களூரைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் அவர்களது மகன் ஆகிய மூவரும் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகைதந்து, பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தங்ககம் ஒன்றில் ஒரு மாதத்துக்கு மேலாக தங்கியிருந்துள்ளனர்.

பின்னர் இரண்டு வாரத்துக்கு முன்னதாக அதே பகுதியில் வீடொன்றை வாடகைக்குப் பெற்று அங்கு சோதிட நிலையத்தை நடத்தியுள்ளனர். தகவலறிந்த நகரசபைத் தலைவர் அனுமதி பெற்று நிலையத்தை அமைக்குமாறும், அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தினார்.

எனினும் அவர்கள் அங்கிருந்து வெளியேறாததனால் பொலிஸாரின் உதவியுடன் அங்கு சென்று அவர்களது ஆவணங்களைப் பரிசோதித்தபோது அவர்கள் ஆவணங்கள் எதுவுமின்றி சட்டவிரோதமாக நிலையத்தை நடத்தியமை உறுதிப்படுத்தியதை அடுத்து அவர்களை எச்சரித்து அங்கிருந்து வெளியேற்றினர். (க-100)

இலவசமாக
ஏடு வழங்கப்படும்
அண்ணா கோப்பி
துறை வீதி, இணுவில் தெற்கு,
இணுவில்.
(CR 46368) A



வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அம்பன் கிராமத்தில் உள்ள பொருண்மியம் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கு மருதங்கேணிப் பொலிஸாரால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25)

பெண் பராமரிப்பாளர் தேவை
சாவகச்சேரியில் பெண் நோயாளர் ஒருவரை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு:- 075 531 7629
(CS/59531) J-1

# கும்பவிழா!...



ஒன்பது வகையான ரசங்களும் அதற்கு மேலதிகமாக ஊற்றுப்பெறும் ராசானுபவங்களும் கும்ப ஆட்டத்தில் காணலாம். இங்கு போலச் செய்தலின் மிக உச்சமான வெளிப்பாட்டுத்திறன் ஸ்ரனிஸ்லாஸ்கி சொல்வாரே பாத்திரங்களை வெளிப்படுத்தல் என்பது இங்கு கும்பவிழாவில் ஒரு ரசவாதமாக மாறி நம்மை பிரமிக்க வைக்கிறது. எத்தனை முகங்கள், எத்தனை பாவங்கள் மாறிமாறி வருகின்ற உணர்ச்சிப் பிரவாகம் எல்லாம் இங்கு கொட்டித் தீர்க்கப்படுகின்றன.

குரோட்டோவ் குரூர அரங்கிற்கான மூலத்தையும், மேயர்கோல்டின் உடற்பொறிமுறை அரங்கிற்கான ஆதாரங்களும், பெரக்டின் அன்னியமாதல் கோட்பாட்டையும், ஸ்ரனிஸ்லாஸ்கியின் பாத்திரமாதல் மரபையும், றிச்சட் செக்னாரின் அனைத்தும் உட்கொண்ட அரங்கின் கூறுகளையும் நாம் இந்தக் கும்பவிழாவில் ஆடப்படும் ஆட்டத்தில் அவதானிக்க முடியும். அரங்கியல் வரலாற்றில் உருவான கோட்பாடுகள் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. இரண்டு பிரதானமான விவாதங்கள் உள்ளன.

(1) சடங்கிலிருந்து நாடகங்கள் உருவானது

2) சடங்கே நாடகம்

இந்த இரண்டு கோட்பாடுகளும் ஒன்றையொன்று இணைத்த முறைமைதான் இங்கு சடங்கே நடனமாக மாறுவதை நாம் காணலாம். ஒரு பரதநாட்டிய அரங்கேற்றத்தில் நீங்கள் எத்தனை விதமான பாவங்களையும் ரசானுபவத்தையும் பெறுவீர்களோ அதற்கு அதிகமாகவே நீங்கள் கும்ப ஆட்டத்தில் காணமுடியும். சில இடங்களில் நரசிங்கராக ஆடுபவர்கள் நாக்கை நீட்டிக்கொண்டு கோர முகத்தை வெளிப்படுத்துகிறபோது எந்தவொரு நடிகனாலும் அத்தகைய பாவத்தைக் கொண்டுவர முடியாத அளவுக்கு கும்ப ஆட்டமுறைமை அமைந்திருக்கும்.

கும்ப விழாவை என் சிறுவயது தொடக்கம் பக்கத்திலிருந்து பார்த்து ரசித்தவன் என்ற வகையிலும் பின்னாள்களில் இவற்றை அறிவியல் ரீதியாக எப்படிப் பார்க்கலாம் என்ற வகையிலும் எனக்கு மேலைத்தேய, கீழைத்தேய கலை மரபு கோட்பாடுகள் துணைநிற்கின்றன. ஒன்றை நாம் எப்படிப் பார்க்கின்றோம் என்ற வகையில்தான் அதன் தன்மை நமக்குள் வெளிப்படும். அதன் உள்ளிருந்து பார்ப்பவர்களுக்கு ஒரு சடங்காக பக்தி அனுபவமாக இருக்க, வெளியிலிருந்து இரசிப்பவர்களுக்கு அது ஒரு கலையாக உணரப்படுகிறது. கும்ப விழா ஒரு தெரப்பியாகவும் தொழிற்படுகிறது. வருடம் முழுவதும் தங்களுக்குள் அடக்கி வைத்திருக்கும் கோபம், சந்தோசம், துக்கம், வெப்பிசாரம் என எல்லா உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒரு களமாகவும் இவை அமைகின்றன. இங்கு ஆடுபவர்கள் அந்த நிலையைப் பெறுகிறபோது பார்ப்பவர்களுக்கு அதனுள் சென்று அந்த அனுபவத்தைச் சுவைக்கிறார்கள். மன அழுத்தங்களுக்கு மருந்தாக இவை மாறுவதை நாம் இங்கு அவதானிக்கமுடியும்.

திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாக நாம் இங்கு கும்ப விழாவைப் பார்க்கமுடியும். ஒரு நடன ஆசிரியர் திருகோணமலையில் இந்தக் கும்ப நடனத்தை மேடையில் தன் பிள்ளைகளைக்கொண்டு நிகழ்த்தியிருந்தார். ஆனாலும் அவை ஒரு முக்கியமான மடைமாற்றம் தனியே ஒரு சடங்கு முறைக்குள் அடங்கிப்போகாமல், இதனை நாம் ஒரு கலையாகவும் அடையாளப்படுத்தவேண்டும்.

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org